**வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை**
**வவுனியா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூன் 26 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். | இயல்பான அடிப்படையில் மீளாய்வாண்டின் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. |

**(ஆ) கணக்கீட்டு குறைப்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பிரதேச சபைக்கு சொந்தமான 150 ஹேக்கர் காணியின் 13 கடை அறைளின் மற்றும் 03 வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிலிடப்பட்டிருக்கவி | அனைத்து சொத்துக்களும் கணக்கிலிடப்பட வேண்டும். | தேவையான நிதி ஏற்பாடு பெறுதல் அடிப்படையில் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிலிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |

ல்லை.

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டில் வருமான செலவு கணக்கில் 03 ஆவது நிகழ்ச்சியின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 13,600,696 ஆன மூலதன பெறுவனவினுள் கடந்த வருடங்களின் நிலுவை முத்திரை கட்டணம் ஈடு செய்வதற்கு மாகாண சபையிலிருந்து பெறப்பட்ட ரூபா 607,392 ஆன பணமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | வருடத்திற்கு தொடர்புடைய வருமானம் மட்டும் சரியாக அடையாளப்படுத்தபட்டு கணக்கிலிடப்பட வேண்டும். | வருங்காலத்தில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும். |
| (iii) | கலாசார நிலையத்தில் கூலி ஒப்பந்தம் அடிப்படையில் மீளாய்வாண்டில் ஒக்டோபர் தொடக்கம் திசெம்பர் வரையான 03 மாதங்களுக்காக கூலி வருமானம் ரூபா 456,499 ஆனதுடன் அது ரூபா 771,176 என கணக்கிலிடப்பட்டிருந்தது. | கணக்குகள் சீராக்கப்படல் வேண்டும். | வருங்காலத்தில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும். |
| (iv) | மீளாய்வாண்டிற்கு தொடர்புடைய நிலையான வைப்பு வட்டி ரூபா 185,000 கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்கு தொடர்புடைய அனைத்து வருமானங்களும் அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிலிடப்படல் வேண்டும். | 2020 வருடத்தில் நிலையான வைப்பு முதிர்ச்சியடைவதனால் அவ் வருடத்தின் கணக்குளில் வெளிக்காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் |

**(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு் அறவிடப்பட வேண்டிய நிலுவை முத்திரை கட்டணம் ரூபா 974,750 | பெறவேண்டிய மீதிகள் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவை வருமானம் அனைத்தும் அறவிடப்படுவதற்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | ஆனதுடன் அப் பெறுமதியினுள் 01 தொடக்கம் 03 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு தொடர்பான பெறுமதி ரூபா 694,750 ஆகும். | | வருங்காலத்தில் அறவிடப்படும். |
| (ii) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை வாகன கூலி வருமானம் ரூபா 385,570 ஆனதுடன் அதில் ரூபா 257,022 ஆனது 01 தொடக்கம் 07 வரை காலமாக நிலுவையாக காணப்பட்டது. | பெற விட வேண்டிய மீதிகள் விரைவில் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவை மீதி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தற்போது தேவையான அறிவுறுத்தல் எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருங்காலத்தில் அறவிடப்படும். |
| (iii) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 15,000 ஆன முற்பணம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலுவையாக காணபபட்டது. | பெற விட வேண்டிய மீதிகள் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அறவிடப்படுவதற்கு எழுத்து மூலமாக பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வருங்காலத்தில் அறவிடப்படும். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல அத்தாட்சிகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தொடர்புடைய அத்தாட்சிகள் முன்வைக்கப்படாததினால் ரூபா 97,993,493 பெறுமதியான 04 கணக்கு விடயங்களின் கணக்காய்வின் போது திருப்திகரமாக அவதானிக்கப்பட முடியாது காணப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகள் உறுதிப்படுத்தும் அத்தாட்சிகள் முன்வைக்கப்படல் வேண்டும். | காணி மற்றும் கட்டிடம் பெறுமதி மதிப்பிடப்பட்டு அளவிடப்பட்டதன் பின்னர் உரிமை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் சபையின் மந்திரியினால் பயனாளிகளுக்கு பகிரப்பட்டுள்ளது. பகிரப்படும் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை முன்வைக்கிறேன். பெறப்பட வேண்டிய மீதிகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | வருங்காலத்தில் சீர் செய்கிறேன். வாகன இயக்க குறிப்புக்களை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| | 127 ஆம் பிரிவு | இடுகாடு மற்றும் கல்லறை ஒழுங்கு விதியின் 03 ஆவது உறுப்புரையின் பணிக்காக சபை முறையான அதிகாரத்துடன் செயற்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருங்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | | | |
| | விதி இலக்கம் 59 | அனைத்து வருடத்தினதும் ஆரம்பத்தில் தொழில்கள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விதி பிரகாரம் தொடர்புடைய ஆய்வு பட்டியல் சரியாக மற்றும் காலத்திற்கேற்ற வகையில் தயாரித்தல் வேண்டும். | வருமானங்களில் 90 சதவீதம் சேர்க்கப்பட்டிருப்பினும் தொடர்புடைய ஆய்வு பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. வருங்காலத்தில் சீராக்குகின்றேன். |
| | விதி இலக்கம் 68 | சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்படாத காணி அடையாளப்படுத்தப்பட்டு வரி அறவிடப்படுவதற்கு | விதிகளின் பிரகாரம் தொடர்புடைய வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் | வருங்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | |
| | விதி இலக்கம் 180 | உத்தரவாத வைப்பு செய்யப்பட வேண்டிய பதவிகளை வகிக்கும் ஊழியர்களிடம் உத்தரவாத வைப்பு பெறப்பட்டிருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் தொடர்புடைய ஊழியர்களிடம் உத்தரவாத வைப்பு பெற்றுக் கொள்வதற்கு நடடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக மிகவும் விரைவில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| | விதி இலக்கம் 191 | சபை கூட்டத்தின் குறிப்புகள் உறுதி செய்யப்பட்டதன் பின்னர் பிரதியொன்று கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | 2019 ஆம் வருடத்தின் எஞ்சிய மாதங்களின் அறிக்கைளின் பிரதிகள் மாதந்தோறும் கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | இலங்கை சனநாயக சோகலிச குடியரசின் நிதிப் பிரமாணம். -நிதிப் பிரமாணம் 570 | அனைத்து அரை ஆண்டின் இறுதியிலும் காலாவதியாகிய அனைத்து வைப்புக்கள் தொடர்பான பட்டியல் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | வருங்காலத்தில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,544,628 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,296,770 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | - | - | - | - | - | - | - | - |
| (ii) | வாடகை | 1,500,000 | 1,420,875 | 1,420,875 | 187,197 | 1,606,000 | 910,510 | 910,510 | 781,560 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,610,000 | 1,149,200 | 1,149,200 | - | 1,090,000 | 1,357,423 | 1,357,423 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 4,176,000 | 5,927,759 | 5,927,759 | 2,820,619 | 3,738,000 | 5,603,452 | 5,603,452 | 2,963,562 |
| | மொத்தம் | 72,86,000 | 8,497,834 | 8,497,834 | 3,007,816 | 6,434,000 | 7,871,385 | 7,871,385 | 3,745,122 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழில் அனுமதிப் பத்திர வருமானம், கடந்த வருடத்தில் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 125 சதவீதமாக காணப்பட்டிருப்பினும் மீளாண்வாண்டில் அதன் வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 71 சதவீதம் வரை குறைந்திருந்தது. | வருமான வளர்ச்சி தொடர்ச்சியாக பேணப்படுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வடக்கு மாகாண ஆளுனரினால் நிலக்கரி தொழில் அனுமதிப் பத்திரம் கட்டணம் ரூபா 3,000 வரை குறைத்ததன் காரணமாக வருமானம் குறைந்து காணப்பட்டது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் சபையின் வேறு வருமானங்கள் சேர்த்தல் மதிப்பிடப்பட்ட | வருமான வளர்ச்சி தொடர்ச்சியாக பேணப்படுவதற்கு முகாமைத்துவம் | வவுனியா தெற்கு பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட போகஸ்வெவ பிரதேசம் |

| | | |
|---|---|---|
| வருமானத்தில் 142 சதவீதமாக காணப்பட்டதுடன் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 8 சதவீதம் குறைந்தமை அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வடக்கு பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்படுத்தப்பட்டதனால் போகஸ்வெவ பிரதேசத்திலிருந்து அறவிடப்பட்ட வருமானம் இழக்கப்பட்டதனால் இக் குறைவு ஏற்பட்டுள்ளது. |

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குட்பட்ட மாமடுவ பிரதேசத்தில் இலங்கை டெலிகொம் நிறுவனத்திற்கு சொந்தமான தொலைதொடர்பு கோபுரம் 2006 யூன் 20 திகதி நிறுவப்பட்டிருப்பினும் அதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 210,000 ஆன நிறுவல் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவல் கட்டணம் முறையாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணியின் உரிமை இலங்கை டெலிகொம் நிறுவனத்திற்கு சொந்தமானதனால் நிறுவல் கட்டணம் அந் நிறுவனத்தின் சட்ட பிரிவினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குட்பட்ட இரட்டை பெரியக்குளம் பிரதேசத்தின் முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் வாகன தரிப்பிட பதிவுக் கட்டணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய பதிவுக் கட்டணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முச்சக்கர வண்டி தரிப்பிட பிரதேசம் ஏராளமாக இல்லாததனாலும் மற்றும் நிரந்தரமாக இல்லாததன் காரணத்தினாலும் பதிவுக் கட்டணம் அறவிடுவதற்கு இயலாதுள்ளது. |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வடக்கு மாகாண சபையிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெறப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,013,874 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 994,750 அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறப்பட வேண்டிய வருமானம் காலத்திற்கேற்ப மற்றும் தாமதமில்லாமல் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருங்காலத்தில் காலத்திற்கேற்ப அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) இடைக்கால சட்டவாக்கம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான பணிகள் நிறைவேற்றுவதற்காக இடைக்கால சட்டவாக்கம் இயற்றப்பட வேண்டியிருப்பினும் அதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பணிக்காக இடைக்கால சட்டவாக்கம் இயற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருங்காலத்தில் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும். |

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட ரூபா 1,294,866 ஆன நிதி ஏற்பாட்டில் மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த | செயற்திட்டத்திற்காக செயல்நடவடிக்கை திட்டம் | வருங்காலத்தில் செயல்நடவடிக்கை திட்டம் |

| | | |
|---|---|---|
| 03 செயற்திட்டங்களுக்காக செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு மட்டம் அடையப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட ரூபா 300,000 ஆன நிதி ஏற்பாடுகளில் பழுது பார்த்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்த பெரியஉளுக்குளம் வீதி 2018 திசெம்பர் 31 திகதிக்கு நிறைவு செய்ய வேண்டியிருப்பினும் அத்திகதிக்கு பௌதீக முன்னேற்றம் 50 சதவீதமாக காணப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவம் செயற்திறனாக செயற்படுதல வேண்டும். | ஒப்பந்த வேலைகள் முடிந்த வரையில் விரைவில் நிறைவேற்றப்பட்டு முன்னேற்றம் அறிக்கையிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தினுள் திண்மக் கழிவுகள் சேர்த்தல், வேறாக்கல் மற்றும் மீள் சுழற்ச்சி செய்தல் தொடர்பாக பொருத்தமான வேலை முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக முகாமைத்துவம் கவனத்திற் கொள்ளல் வேண்டும். | திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக வருங்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைக்கு சொந்தமான இலங்கை வங்கியின் நடைமுறை கணக்கில் மீளாய்வாணடில் இறுதியில் காணப்பட்ட ரூபா 4,649,426 ஆன மேலதிக பண மீதியிலிருந்து ஒரு பகுதி பயனுள்ள வகையில் முதலீடு செய்வதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். | பதில் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. |
| (ஆ) | சபைக்கு சொந்தமாக வாகனங்கள் மற்றும் 30 இயந்திரங்கள் இருப்பினும் அதற்காக ஒரு ஓட்டுநர் மட்டும் இணைக்கப்பட்டிருந்தார் | வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் வினைதிறனாக மற்றும் பயனள்ளதாக பயன்படுத்துவதற்கு பொருத்தமான முறைமையொன்று திட்டமிடப்பட்டு செயற்படுத்தல் வேண்டும். | காணப்படுகின்ற பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையில் காணப்பட்ட 11 பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக மாகாண ஆணையாளருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்கப்பட்டு பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. |

**3.4 செயற்பாட்டு செயற்திறன்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) உறுப்புரையின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசம், பிரதேச சபையினால் கருத்து தெரிவிக்கப்பட்டு வரிப்பணம் விதிக்கப்பட மற்றும் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் 134(1) உறுப்புரைக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசம் அடையாளப்படுத்தப்படவில்லை. அடையாளப்படுத்தப்பட்டால் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓட்டத்திலிருந்து நீக்கப்பட்ட 04 வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் பழுது பார்க்கப்பட்டு பயனுள்ளதாக பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருங்காலத்தில் இவ் வாகனங்கள் பழுது பார்க்கப்பட்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5.2 சொத்துக்கள் வகைப்படுத்தப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 68 துண்டுகளை உடைய 150 ஹேக்கர் காணி தீர்க்கப்பட்டு சபைக்கு வகைப்படுத்திக்கொள்வதற்கு மற்றும் 28 வாகனங்களின் உரிமையை வகைப்படுத்திக்கொள்வதற்கு 2019 ஏப்ரல் 26 திகதி வரையிலும் | சொத்துக்களின் தீர்வு உரிமைகள் சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருங்காலத்தில் உரிமையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.3 செயற்படாத மற்றும் குறை பாவனையுள்ள சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான 10 வாகனங்கள் 09 மாதங்கள் தொடக்கம் 07 வருடங்கள் வரை செயற்படாது காணப்பட்டது. | சொத்துக்கள் செயற்படாது காணப்படாமலும் வினைத்திறனுடனும் மற்றும் பயனுள்ளதாக பயன்படுத்தப்படவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பழுதுபார்க்கப்பட்டு வருமானம் ஈட்டக்கூடிய பணிகளுக்கு பயன்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 2013 ஆம் வருடத்தில் ரூபா 2,298,816 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 02 வார சந்தைகள் 2019 ஏப்ரல் 26 திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் வினைத்திறனுடன் மற்றும் பயனுள்ளதாக பயன்படுத்தப்படவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த இரண்டு வார சந்தைகள் எந்தவொரு வாங்குனரும் விண்ணப்பிக்காததனால் பயனற்று காணப்படுகின்றது, |

### 3.5.4 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியில் சபைக்கு சொந்தமான 24 வாகனங்களின் எரிபொருள் பரிசோதணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் எரிபொருள் பரிசோதணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | வருங்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) சபைக்கு சொந்தமான WPLG 8964 மற்றும் WPPF 3326 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அரசின் அனைத்து | அரச இலச்சினை குறிக்கப்பட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | |
|---|---|
| இலக்கங்களையுடைய கெப் வாகனங்களில் அரச இலச்சினை குறிக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களுக்கும் அரச இலச்சினை குறிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 பெறுகைகள்**

**3.6.1 பெறுகை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 912,683 ஆன பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பினும் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டடிருக்கவில்லை. | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். | வருங்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.6.2 வழங்கல் மற்றும் சேவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 பெறுகைகள் வழிக்காட்டி கோவையின் 2.14.1 பந்தியின் பிரகாரம் சந்தை விலை குறிப்பு முறைக்கு அமைவாக 04 சந்தர்ப்பங்களின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,360,760 பெறுமதியான பொருட்களுக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் விலை கோரப்பட்டிருக்கவில்லை. | சந்தை விலை குறிப்பு முறைக்கு அமைவாக கொள்வனவு செய்யப்படும் போது பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் விலைக் கோரப்படல் வேண்டும். | தற்போது சபைக்கு பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் இல்லாததுடன் 2020 இல் வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டு அதன் பிரகாரம் பெறுகைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உள்ளக கணக்காய்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு திட்டமொன்று காலத்திற்கேற்றவாறு தயாரித்தல் வேண்டும் | வருங்காலத்தில் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |